Registered as a News Paper in Sri Lanka

COMPLIMENTARY

# குன்றின் குரல்

பெப்ரவரி 1987 | மலர் 7 | இதழ் 2 | விலை 1—00

RECEIVED 29-4-1987


# மலைநாட்டு காந்தியை மக்கள் மறந்துவிட்டனரா?

மலையக மக்களுக்கு தன்னையே அர்ப்பணித்த தன்னலம் கருதாத தனிப்பெரும் தலைவராக திகழ்ந்த மலைநாட்டு காந்தி அமரர் கே. இராஜலிங்கம் எம்மைவிட்டு பிரிந்து ஆண்டுகள் பல ஓடி மறைந்து விட்டன. இப்பொழுது அவரைப் பற்றிய நினைவுகளும், தகவல்களும் இன்றைய தலைமுறையினர்க்கு தெரிய வாய்ப்பில்லை.'

ஜே. ஜேன்கொடி

தமிழகத்தில் பிரபல எழுத்தாளராகவும் காந்தீய வாதியாகவும் திகழ்ந்த கல்கி ஆசிரியர் அமரர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அமரர் இராஜலிங்கம் அவர்களின் அரிய சேவையினை நேரிலே கண்டபின்னர் அப்பொழுது தமிழகத்தில் அதிகம் விற்பனையாகிய கல்கி வார இதழில் அமரர் இராஜலிங்கத்தின் திருவுருவப் படத்தை அட்டைப்படமாக பிரசுரித்தது மாத்திரமின்றி மலைநாட்டு காந்தி என்று மகுடமிட்டு தலையங்கம் தீட்டியது. அமரர் இராஜலிங்கம் அவர்கள் இளமை காலம் முதல் இறக்கும் வரை மலைநாட்டு மக்களுக்காக அதுவும் தோட்டத் தொழிலாளர்களுக்காக அயராது பணியாற்றி வந்திருக்கின்றார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பித்த காலம் தொட்டே ஒரு முக்கிய தலைவராக விளங்கினார். அது மாத்திரமல்ல அவர் 1947ல் நாவலப்பிட்டிய தொகுதி பாராளுமன்ற அங்கத்தவராக இருந்த போதும் முழு நேர தொழிற்சங்க வாதியாக பணியாற்றிய போதும் மனிதருள் ஒரு மாணிக்கமான மகாத்மா காந்தியைப் போல் எளிமையான வாழ்க்கையே நடத்திவந்தார்.

அமரர் இராஜலிங்கம் மலைநாட்டு கல்வியில் அதிக அக்கறை காட்டினார். மலையக மகன் ஒவ்வொருவரும் அறிவாளியாக திகழ வேண்டுமென்று கனவு கண்டார். இதனை நனவாக்க இரவு பகல் பாராமல் உழைத்து வந்தார்.



அமரர் இராஜலிங்கம்

இன்று கம்பளைக்கு அடுத்துள்ள புசல்லாவையில் தலைநிமிர்ந்து நிற்கும் சரஸ்வதி வித்தியாலயம் தலைநிமிர்ந்து நிற்கிறதென்றால் அதற்கு மூல காரணம் யார்? இதனை ஸ்தாபித்த பெருமை மலைநாட்டு காந்தி இராஜலிங்கத்தையே சேரும்.

அமரர் இராஜலிங்கத்தின் பெயரிலேயே இந்த வித்தியாலயத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும். இதுவே நாம் அவருக்கு செய்யும் கௌரவமும் நன்றியுமாகும். அவரின் சகதோழரும்

(8ம் பக்கம் பார்க்கவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிகள்...

நீ
ஒரு எழிலோவியம்
அதனால்தான்
உன்னை
என்
இதய அறையில்
மாட்டி
அழகுபார்க்க
விரும்புகிறேன்!

நீ...........
ஒரு இனிய கவிதை
அதனால் தான்
உன்னை
நான் மட்டுமே
படித்து ரசித்து
சுவைக்க விரும்புகிறேன்!


நீ...........
ஒரு கோகினூர் வைரம்
அதனால் தான்
உன்னை
என்
மனப்பேழையில்
பூட்டி வைத்து
பாதுகாக்க
விரும்புகிறேன்!

நீ...........
ஓர் அற்புத ராகம்
அதனால்தான்
உன்னை
எனது
இதய வீணையில் மட்டுமே
இசைக்க நினைக்கிறேன்!

நீ...........
ஒரு உச்சிமலையின்
இனிய ஊற்று
அதனால் தான்
உன்னை
எனது
மன வயலின்
காதற் பயிருக்கு
மட்டுமே
பாய்ச்ச நினைக்கிறேன்

இப்படி யெல்லாம்
எனக்கு
காதற் கவிதைகள்
எழுதிய
காதல (க) ன்
நான்
சீதன தேரேறி
வந்தால் தான்
திருமாங்கல்யம்
சூட்டுவானும்
அட போலிகளே


குறிஞ்சி தென்னவன்



இலங்கை பொது சேவையாளர் சங்க ஏற்பாட்டில் பன்விலையில் நடைபெற்ற "குறிஞ்சி தென்னவன் கவிதைகள்" நூல் வெளியீட்டு விழாவில் பொதுச் செயலாளர் திரு. ஜயரட்ண மல்லியாகொட விடமிருந்து முதல் பிரதியை தொழிலாளத் தோழர் கே. வெண்டிநாதன் பெற்றுக்கொள்கிறார். இரண்டாவது படத்தில் குறிஞ்சி தென்னவனின் உரையை சிங்களத்தில் மொழிபெயர்க்கிறார் ஜேஸ்கொடி, மூன்றாவது படத்தில் அந்தனிஜீவா உரையாற்றுகிறார்.

(படம் வி. எம். எஸ். குணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## என். எஸ். எம். ராமையாவின்


# ஒரு கூடைக் கொழுந்து

— அந்தனி ஜீவா —

ஒரு சமுதாயத்தின் மாற்றம் அச்சமுதாயத்தின் இலக்கியத்திலும் பிரதிபலிக்கப்படுவது தவிர்க்க முடியாத அம்சமாகும். இத்தகைய சமுதாய விழிப்புணர்வானது அவ்வக்கால கட்டங்களில் இலக்கியத்தில் பிரதிபலித்துள்ளமையை நாம் காணக் கூடியதாக உள்ளது. இதனை நாம் மலையக சிறுகதை சிற்பியான என்.எஸ்.எம்.ராமையாவின் "ஒரு கூடைக் கொழுந்து" சிறுகதைத் தொகுதியில் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

ஆரம்ப காலத்தில் மலையகம் வாழ் தமிழ் மக்கள் பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளின் நேரடியான சுரண்டலுக்கு உட்பட்டிருந்தனர். தேயிலை தோட்டத்திலே தங்கள் வாழ்வை அர்ப்பணிக்க வேண்டிய சூழ்நிலையில் உழைப்பு ஒன்றைத் தவிர வேறு ஒன்றையும் அறியாத வகையில் தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கை அமைந்திருந்தது.

தோட்டம் என்ற தோட்டக்காட்டினிலே தான் அவனது சுவர்க்கம் அமைந்திருந்தது. புறாக் கூண்டுகளைப் போல அமைந்திருந்த லயக்காம்பிராவில் தான் வாயில்லாத ஜீவன்களாக வாழ வேண்டியிருந்தது. இந்த நிலையில் அவனிடம் அடிமை மனப்பான்மை தலைதூக்கியிருந்தது. அவனது அடிமை வாழ்க்கையோ அல்லது அவனது துன்ப துயரங்களோ வெளியில் தெரியாதிருந்தது. போதிய கல்வி வசதி இன்மையால் அவனைப்பற்றி அவனுக்கே எண்ணிக் கூடப் பார்க்க முடியவில்லை அடிமைச் சமுதாயமாக உழைப்பு ஒன்றைத் தவிர வேர ஏதுமில்லாத உழைக்கும் இயந்திரமாக வாழ்ந்து கொண்டிருக்கும் அவனிடமிருந்து எப்படி இலக்கியம் பிறக்க முடியும்.



மலையக சிறுகதைச்சிற்பி என். எஸ். எம். ராமையா தனது சிறுகதைத் தொகுதியான "ஒரு கூடைக் கொழுந்து" என்ற நூலுக்கு சாகித்திய மண்டல பரிசினை அமைச்சர் திரு. செ. இராசதுரையிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்.

ஆனால், கால மாற்றத்தினால் ஒரு சிலருக்குக் கல்வி வாய்ப்பு கிட்டியது. இதன் பலனாக மலையக மக்களின் யதார்த்த பூர்வமான வாழ்க்கையை வெளியுலகிற்கு தெரியும வண்ணம் மலையக இலக்கிய முன்னோடிகளாக சி. வி. வேலுப்பிள்ளை கே. கணேஷ் மாத்தளை அருணேசர் போன்றவர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதினார்கள். மற்றும் "தொண்டன்" என். எஸ். நாதன், கவிஞர் பீ. ஆர். பெரியசாமி, கோவிந்தசாமி தேவர் போன்றவர்கள் எளிய நடையில் பாடல்களை எழுதி மலையக மக்களின் இருண்ட பிரசனைகளை வெளிச்சம் போட்டு காட்டினார்கள். மலையக உரை நடை இலக்கியத்தின் முதல்வரான கோ. நடேச ஐயர் எழுதியது மாத்திரமின்றி நேரடியாகவே பிரச்சனைகளில் பங்குபற்றினார்.

மலையக மக்களின் துன்பதுயரங்களை அவர்களின் யதார்த்த பூர்வமான வாழ்க்கையை மலையக படைப்புகளில் அறிந்துகொள்ள முடியும். மலையக சிறுகதைக்கு உருவம கொடுத்தவா என மலையக சிறுகதை எழுத்தாளர்களாலேயே பாராட்டப்படும் என். எஸ். எம. ராமையாவின் "ஒரு கூடைக் கொழுந்து" என்ற சிறுகதைத் தொகுதியில் உள்ள சிறு கதைகளை படித்துப் பார்த்தால் அவைகள் மலையக உழைக்கும் மக்களின் வாழ்க்கையிலிருந்து முகிழ்ந்திருக்கின்றன. இவரது சிறுகதைகளில் மலையக மக்களின் துயரமான சோக சம்பவங்கள் இழையோடுகின்றன.

"வாழ்க்கையின் சாளரமே சிறுகதை" என தமிழ்ச் சிறுகதையின் முன்னோடியான புதுமைப் பித்தன் எடுத்துரைத்தான். அதற்கு இலக்கணம் வகுத்தாற்போல "ஒரு கூடைக் கொழுந்து" சிறுகதைத் தொகுதியில் எழுத்தாளர் என்.எஸ்.எம். ராமையா மனிதாபிமானத்தோடு பாத்திரங்களைப்

(7ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதை

# கிழவியின் ஆசை

புசலாவை இஸ்மாலிஹா

செவப்பி கிழவிக்கு இப்போது எம்பது வயதாகிறது. செவிட்டு கங்காணி என்று செல்லமாக தோட்டத்தில் அழைக்கப்பட்ட ஆறுமுகம் கங்காணிக்கு வாழ்க்கைப்பட்ட அவள் பத்து வருடங்களை வயிறார உண்டு, ஆசையாக உடுத்து வாழ்ந்தாள். பிறப்பிலே நோயாளியான ஆறுமுகம், தன் நல்ல குணங்களின் காரணமாக துரையின் பிரியத்தைப் பெற்று கங்காணியான போதும், அதை அனுபவிக்க இயலாது சிறுவயதிலேயே காதும் மந்தமாகி கொஞ்சநாட்களில் இறந்தும் போனான்.

முப்பது வயதுக்கப்புறம் திருமணம் செய்தும் திடீரென்று சூனியமாகிப் போன வாழ்க்கையையும் சின்னஞ் சிறுசுகளான நான்கு பிள்ளைகளையும் எண்ணி ஒருகணம் செவப்பி அதிர்ந்தாலும், எப்படியும் இதுகளை வளர்த்து ஆளாக்கியே தீருவது என்று அவள் உறுதி கொண்டாள், அவளதும் கணவன் ஆறுமுகத்தினதும் உறவுகளெல்லாம் தானாகவே கழன்று கொண்ட போதும் கூட தன் இளவயது ஆசைகளையெல்லாம் மண்ணில் உதிர்த்தவளாக தினம் மலையில் கொழுந்தெடுத்து அரும்பாடுபட்டு தன் குழந்தைகளின் பசியைப் போக்கி மானத்தை மறைத்தாள்.

செவப்பியின் ஏழ்மையைக் காணும் சிலர் "இவ கட்டுர சேலையை நெருப்புல போட்டாலும் எரியாது" என்றும் "நல்ல சோறு கறிய இவ என்னைக்கி கண்டா" என்றும் "மொட்டையா கெடக்கிர காதுல ஒரு இமிடேசனாவது வாங்கி போட வக்கில்லயே" என்றும் பலவாறு விமரிசித்து எள்ளிநகையாடிய போதும், எவருடைய சொல்லும் தன்னை ஒன்றுஞ் செய்யாது என்பது போல அவள் வறுமையிலும் செம்மையாகத்தான் இருந்தாள்.

ஒரு நேர உணவுண்டாலும், கந்தலை தானும் பிள்ளைகளும் அணிந்து கொண்டாலும் எவரிடமும் கைநீட்டாமல், தன் துன்பங்களை வெளிக்காட்டாமல், "எனக்கும் ஒரு நேரம் வரும் அப்ப இந்த சின்னஞ் சிறுசுகளும் பெரிசாகிரும், அப்ப அநுபவிச்சிக்குறேன்" என்று தன் பெண்மனதை சமாதானம் செய்து கொள்வாள். அவள் நினைத்தது போலவே காலங்கள் கண்ணும்மூச்சி விளையாட அவளது நான்குபிள்ளைகளும் மளமள வென வளர்ந்து நின்றனர்.

ஒரு தையில் மூத்தவள் கமலா பெரியவளான போது அவளுக்கென்றே ஒரு பசுக்கன்றை வாங்கி தினம் மழை வெயில் பாராது புல் அறுத்துப் போட்டு மாடாய் உழைத்து பால் ஊற்றி அந்த வருமானத்தில் அவளுக்கு உடுப்பும் நகையும் வாங்கி நல்ல ஒரு பையனைப் பார்த்து கோயிலில் திருமணமும் செய்தும் வைத்தாள்.

இளையவள் சரசு அக்காவைப் பின்பற்றவில்லை. நினைத்ததை சாதிக்கத் துடிக்குமவள். மேல்லயத்து கருப்பையாவின் மகனான சந்திரனை விரும்பி தாயின் பேச்சையும் மீறி ஒருநாள் அவனுடன் அவன் வீட்டுக்கே போய்விட்டாள். இந்த சம்பவத்தால் மனம் உடைந்து போன செவப்பி பெற்ற மனதை கல்லாக்கிக்கொண்டு, ஒரே தோட்டத்தில் இருந்த போதும் அவளது வீடு மேல் லயத்தில் கண்ணுக் கெட்டிய தூரத்தில் காட்சியளித்தபோதும் அவளது தொடர்பையே துண்டித்தவளாக, யார் சொல்லியும் மனம் மாறாதவளாய், மகளை மன்னிக்க விரும்பாதவளாய் ஒதுங்கியே இருந்தாள்.

மூன்றாவது மகன் தம்பாவோ சிறுவயது முதலே தாய்க்கு அடங்கியவனாக இருந்து செவப்பி தேர்ந்தெடுக்க அஞ்சலையை திருமணம் செய்து கொண்டு குடியும் குடுத்தனமுகமாக இருந்தான். குடியின் காரணமாக மனைவியின் சம்பாத்தியத்தை வீணாகக்கரைக்குமவன் தினமும் மனைவியோடு சண்டை போடுவான். அவர்களின் சண்டையில் கிழவியும் மாட்டிக்கொண்டு தவிப்பதுண்டு என்றாலும் அவர்களுடனேதான் அவள் வசித்து வந்தாள்.

நாலாவது மகன் குமார் சதா முசுடு, முன்கோபி அவனுக்கு செவப்பி கல்யாணம் செய்து வைத்தாலும் வைத்தாள், அன்று தொடக்கம் அவன் மனைவி சொல்லே மந்திரம் என்பதுபோல அவள் சொல்லைக் கேட்டு ஆடத் தொடங்கிவிட்டான். மாமியாரிடம் ஏதாவது 'பசை' இருப்பதை மேப்பம்பிடித்து அறியும் மருமகள் அதை வாங்கிக் கொண்டுவந்து தரும்படி கணவனை கரையாய் கரைப்பாள். அவனும் பெற்ற தாயென்றும் பாராமல் தாயின் கையில், மடியில் இருப்பதை பறித்து மனைவியின் கையில் கொடுப்பான். 'மடி' காலி என்பதை உணர்ந்தால் அந்தப்பக்கமே வரமாட்டான். வேலை செய்யும்வரை செவப்பி மகன்மாருக்கு கொடுத்துக் கொண்டுதானிருந்தாள். வயது காரணமாக வேலை நிப்பாட்டப்பட்டதும் கை ஒடிந்தவளாய் மருமக்கள் மாரின் அலட்சியத்தை சுமந்தவளாய் பரமுவின் வீட்டில் ஒதுங்கினாள்.

(5ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4ம் பக்கத் தொடர்ச்சி)

எத்தனை பிள்ளைகள் இருந்தபோதும் செவப்பி எவருடைய தயவையும் எதிர்ப்பார்க்கவில்லை. தன் ஊதாரித்தனத்தால் வறுமைப்பட்டுக் கிடக்கும் மூத்தமகன் பரமுவுடனிருந்து கொண்டு அவனுக்கும் பிள்ளைகளுக்கும் தன்னால் இயன்ற உதவியைச் செய்யவே விரும்பினாள். இந்தத் தள்ளாத வயதிலும் விறகு சுமந்து தண்ணீரள்ளி, சமைத்து குழந்தைகளைப் பார்த்துக் கொண்டுதான் தன் அரை குறை பசியைத்தணித்தாள், தனக்குக் கிடைக்கும் தன் தேயிலைத் தூளைக் கூட விற்று அக்குடும்பத்திற்கே கொடுத்தாள்.

கணவன் இறந்தபின்பு தன் நான்கு பிள்ளைகளுக்காகவும் எவ்வளவோ தியாகம் செய்து களைத்தும் போன அவளை, துளியும் மதியாமல் சுயநலமிகளாகப் போன தன் நான்கு பிள்ளைகளையும் அவள் புரிந்து கொண்ட போதும், அதைப் பற்றி சிவப்பி என்றுமே கவலைப்பட்டதில்லை. தீபாவளியின் போதோ பொங்கலின் போதோ தூர இருக்கும் கமலாவும் குமாரும் வந்து எட்டிப் பார்த்து விட்டுப் போனாலும் பிடிவாதமும், சுய நம்பிக்கையும் மிகக் கொண்டதாயிடம் இருந்து அவர்கள் தள்ளியே இருந்து கொண்டார்கள்.

இப்படி இருந்தவர்களை செவப்பியின் காசு சற்று கிட்டவரச் செய்தது. கிளுகிளுப்பூட்டியது "என்னூட்டு பண்டு பணம் மெல்ல வரட்டும் என்ன அவசரம்" என்று அடிக்கடி கூறி பிள்ளைகளின் வயிற்றெரிச்சலை வாங்கிக் கட்டிக் கொண்ட கிழவி சிலமாதங்களுக்கு முன்பு வயிற்றோட்ட நோயில் விழுந்து செத்துப் பிழைத்தும் திடீரென "அந்தச் சள்ளிய சட்டுனு எடுக்க ஏற்பாடு செய் பரமு" என்று கூறி பரமுமை ஒபிசுக்கும் யூனியனுக்குமாக ஓடவைத்தாள். அதன்பலன் மூன்று மாதங்களின் பின் அவளது பணம்" செக்காக பதினைந்தாயிரம் ரூபாவாக வந்திருக்கிறது. ஒபிசிலுள்ளளாக் நாளை பத்து மணிக்கு வந்து கைநாட்டு வைத்து விட்டு எடுத்துச் சென்று பேங்கில் போடும்படி கூறியுள்ளார். நாளை எப்போது விடியும்?

செவப்பிக்கு இருப்பு கொள்ளவில்லை வெற்றிலையை குதப்பிக் கொண்டு அவள் முற்றத்தில் உட்கார்ந்தாள். அவள் மனதில் ஏனோ திடீரென்று இனம்புரியாத பல ஆசைகள் நீர் குமிழிகளாக எழுந்தன, தன் கந்தல் சீலையை உற்று நோக்கியவள், வரப்போகும் சல்லியில் தான் மிகவும் ஆசைப்படும் நிறமான சிவப்பில் இரண்டு சேலைகளும். பல வருடங்களாக தங்கத்தையே கண்டறியாத காதுகளுக்கு ஒரு சோடித்தோடுகளும் வாங்க வேண்டுமென தீர்மானித்தாள். அப்போது சிறு வயதில் கூட தன் நினைவில் எழாத பல டிசைன் தோடுகள் அவள் மனக் கண்ணில் எழுந்தன. சிறு பெண்ணைப் போல அவள் குதூகலப்பட்டாள். "நா சம்பாரிச்ச சல்லியிலதானே வாங்கப் போறேன்" என்று அவள் தன் எண்ணங்களுக்கு சமாதானமும் கூறிக் கொண்டாள்.

பக்கத்து வீட்டில் கறி தாளிதம் செய்யும் வாசனை அவள் மூக்கிற்கு எட்டியது. உடனே தான் நல்ல சோறு கறி உண்டு பல வருடங்களாகி விட்டது என்ற நினைப்பும் வர "சரி சல்லி வந்ததும் மருமககிட்ட சொல்லி கோலி அடிச்சி சாராயமும் குடிக்க வேண்டுமென எண்ணிக் கொண்டாள். அந்த கனவுகளோடு நித்திரை மெல்ல அவளை அணைத்துக் கொண்டது.

மறுநாள் குளித்து சாமிகும்பிட்டுவிட்டு பத்து மணியளவில் கிழவி பரமுவுடன் ஒபிசுககு புறபபட்டாள். கிளாககரய்யா சொன்னவறறிற கெல்லாம் தலையசைத்து பெருவிரல் அடையாளத்தை வைத்துவிட்டு பதினைந்தாயிரம ரூபாய் செக்கைப் பெற்றுக் கொண்டாள். அன்றே மகனுடன் டவுனுககுச் சென்று வங்கியில காசை மாறறிய போது. அவளுக்கு பிரமிப்பாக இருந்தது பத்தாயிரம ரூபாவை புத்தகத்தல போட்டு விட்டு ஐயாயிரம் ரூபாவை எடுத்த பரமு தன் கடன சுமை பற்றியும. தன ஓரே பெணபிள்ளையின் காது குத்து பறறியும தாயிடம கூறி தனக்கு கடனாக ஐயாயிரம் ரூபாவை தரும்படி கேட்டபோது கிழவி இளகிப் போனாள் அவனது ஏழ்மையை எண்ணித் துடிததவள் ஐயாயிரம ரூபாவை அவனிடமம கொடுததாள். வேண்டியதை வாங்கிக் கொளளச சொன்னாள்.

பரமு தன் பல வருட கடன்களையெல்லாம் ஓடோடி தீர்த்துவிட்டு மனைவிககும மகளுககு தேவையானதை வாங்கிக் கொண்டு ஒரு போத்தல் சாராயத்தோடு வந்தபோது கிழவியின் சேலைக் கனவும், நகைக் கனவும் மங்கிப போகத் தொடங்கின. "சரி அடுத்த முறை பார்த்துக் கலாமென எண்ணி கொஞ்சம் வெற்றிலைப் பாக்கோடு அவள் வீடு திரும்பினாள்.

சில நாட்களில் சரசு வந்து ஒப்பாரிவைத்து அழுதாள். தன்னை மறந்து விட்டதாக சண்டையிட்டாள், கடைசிவரை, கிழவி தன்னுடன் வைத்துக் காப்பாற்றுவதாக சூழுரைத்தாள், கிழவியின் மனம் பாகாய் உருகியது "மகள் தானே" எனறு ஐயாயிரம் ருபாவை வங்கியில் இருந்து எடுத்து அவள் கையல் கொடுத்தாள். ஆனால் அவளோடு சென்று தங்க மட்டும் மறுத்து விட்டாள்.

எங்கோ சென்றிருந்த குமார் யார் மூலமோ செய்தி கேட்டு ஓடோடி வந்தான். ஒரு நாளாவது தாயைக் கூப்பிட்டு ஒருபிடி சோறு போடாதவன் அன்று பலகாரமும் சோற்று பார்சலுமாக மனைவியுடன் வந்திருந்தான், கடைசியில் யாருமில்லா சமயம் பார்த்து ஒரு ரேடியோ வாங்க இரண்டாயிரம் ரூபா பணம் வேண்டுமென கெஞ்சி நின்றான் கிழவி முதலில் போசாமல் இருந்தாள் பின் பரமும் அவன் மனைவியும் எவ்வளவோ தடுத்தும் கேளாமல் பேங்கிலிருந்து இரண்டாயிரம் ரூபாவை எடுத்துக் கொடுத்தாள்.

(6ம் பக்கம் பார்க்கவும்)

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி ஆறுமாதத்திற்குள் அதற்கு இதற்கென்று பதின்மூவாயிரம் ரூபா கரைந்த போது கிழவிக்கு மனம் தளர்ந்தது. தான் ஒரு சேலையாவது வாங்கிக் கட்டவில்லையே என்று எண்ணியவளுக்கு அதனூடாக தன்னை விட்டு விலகிப்போன மகள் சரசுவின் ஞாபகம் வந்தது. அவளை நினைக்கையில் மனம் கசிந்தது. தான் அவளை தள்ளி வைத்த போதும் ஒரே தோட்டத்தில் இருந்து கொண்டு கோபம் பாராட்டிய போதும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் சதா தன்னை பரிவுடன் நோக்கும் விழிகளையும் மன்னிப்புக்காக மன்றாடும் மனத்தையும் எண்ணுகையில் அவளின் இதயம் வெடித்துவிடும் போலிருந்தது. கண்களில் நீர் திரண்டது, ''இவ்வளவு நாளும் நா அவளுக்கு கொடுத்த தண்டனை போதும். நாளைக்கி தலைவர் மூலமாக சரசுவ கூப்பிட்டு தாலி செய்ய இரண்டாயிரம் கொடுத்து அனுப்பணும்'' என்று முடிவெடுத்தவள் நிம்மதியாக பெருமூச்சு விட்டாள்.

மறுநாள் விடிந்தது. நான்கு வருடங்களின் பின் சரசு அந்த வீட்டுப்படியேறி வந்தாள். தாய் தன்னை கூப்பிட்டதை நம்ப அவள் மிகவும் சிரமப்பட்டாள். ''ஆத்தா என்னய மன்னிச்சுகக'' என்று காலில் விழுந்து புலம்பினாள், கையோடு கொண்டு வந்திருந்த இடியப்பத்தையும் சம்பலையும் ஆசையுடன் கையில கொடுத்தாள். கிழவியின் கண்களில் தாரை வழிந்தது. மனம் சாந்தி அடைந்தது.

தோட்டமே வியந்து நிற்க அன்று சரசு அவ்விட்டுக்கு வந்து உறவாடிவிட்டுப் போனாள். போகும் போது செவப்பி இரண்டாயிரம் ரூபாவை மகள் கையில் வைத்து அழுத்தினாள், ''இந்தாம்மா இதுதான் என் கடைசிச் சொத்து இதுல ஒரு தாலிய செஞ்சு மஞ்சக் கயித்துல முடிஞ்சுக்க என்றாள். சரசுவின் மனம் வேதனையில் அழுதது, மற்ற அனைவரிடமும் அவள் ஏமாந்து போனது அவள் நெஞ்சை நெருடியது ''வேணும்மா தாலி செஞ்சு அவரு போடட்டும். நீ சொல்லரதுக்காக ஆயிரம்ரூபாவ வேணுமனா எடுத்துக்கிறேன். மததததை நீயே வெச்சுக்க ஒரு நோய் நொடினா உன்கையிலும் நாலு காசு வேணுமா? என்றவள் ஆயிரம்ரூபாவை அவளுடைய சுருக்குப் பையில் வைத்து வீட்டுச் சென்றாள்.

மறுநாள் காலை புலர்ந்தது. எல்லோரும் எழுந்து புறப்பட்டனர், செவப்பியை எழுப்பி தேனீர் கொடுக்க முனைந்த மருமகள் வள்ளி ''எழும்பு கெழவி என்று எரிச்சலோடு தட்டிய போது மரக்கட்டையாகிப் போயிருந்த கிழவியைக் கண்டு திடுக்குற்று அலறினாள். அவளது சத்தத்தைக் கேட்டு ஓடிவந்த அயல் லயத்துக்காரர்கள் கிழவி மண்டையைப் போட்டுவிட்டதை உணர்ந்து மௌனமாகி வேதனையோடு பார்த்துவிட்டு வெளியேறினர். இவ்வளவு நேரமும் கல்லாக ஒரு மூலையில் நின்ற பரமு உயிர்வந்தவன் போல பிணத்தின் அருகில் வந்து நின்று விட்டு தலையணைக்கு கீழே இருந்த சுருக்குப்பையைத் திறந்து ஆயிரம் ரூபாவை எடுத்துக்கொண்டு செவப்பு சேலைனா ஆயாவுக்கு ரெம்ப ஆச இப்பவே நா டவுனுக்கு போய் ஒரு சேல' வாங்கிவரணும்'' என்று கரகரப்பான வேதனைக் குரலில் கூறியவன் மறவாமல் இரண்டு வெற்று சாராயப் போத்தல்களுடன் டவுனுக்கு அவசரமாக ஓடினான்.

## ஆணவம்

தரையில் கிடந்தால்
ஒரு குருவி கூட
தன்னை கொத்தி
கொன்று விடும்
என்பதை, உணராத
பாம்பு –
சிவன் கழுத்தில்
இருப்பதால்
கருடனையே
சவாலுக் கழைக்கின்றது.

வி. எஸ். வேலு

குன்றின் குரலின் ஆரம்ப ஆசிரியர் அருட்திரு எஸ். மரிய அந்தோனி, அவர்களின் அன்பு தம்பி எஸ். கிறிஸ்த்து ராஜா 14-02-87 அன்று காலமானார். இவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆன்மா நித்திய இளைப்பாற்றிற்காக பிரார்த்திக்கிறோம்.

- ஆசிரியர் குழு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3ம் பக்கத் தொடர்ச்சி)

படைத்துள்ளார் இச்சிறுகதைகளில் கடந்த கால மலையகத்தை நம்மால் தரிசிக்க முடிகிறது. இந்தச் சிறுகதையில் காணப்படும் பாத்திரங்கள் சம்பவங்கள் வாழ்வோடு வரலாற்றோடு பின்னி பிணைந்து விட்டன. இந்தத் தொகுதியின் தலைப்புக்கு உரித்தான "ஒரு கூடைக் கொழுந்து" சிறுகதையில் நாம் சந்தித்து உறவாடும் லெட்சுமி பாத்திரம் நாம் என்றைக்கும் மறக்க முடியாத ஓர் பாத்திரம்.

'வேட்டை' சிறுகதையில் ரங்கையாக் கிழவனின் ஆசை எப்படி நிராசையாகின்றது, ஒரு கமிராவால் படம் பிடித்துக் காட்டுவதைப் போலக் காட்டுகின்றார், கதாசிரியர் ராமையாக் கிழவன் "முழங்காலை பிடித்துக் கொண்டு படிகளில் ஏறிவந்த கிழவன் கடைசிப்படியில் நின்று வாயால் ஊதிக்கொண்டான். பத்துப் பதினைந்து படிகளில் ஏறியதில் அவனுடைய கிழட்டுக்கால் வெட வெடவென நடுங்கின" இப்படி ரங்கையாவை வர்ணிக்கிறார். ரங்கையாக் கிழவனுக்கோ சிவசாமி வாங்கியிருப்பது போல பெட்ரோமெக்ஸ் லைட் வாங்கிவிட வேண்டுமென்ற ஆசை, அந்த ஆசையைத் தன் மகனிடம் சொல்லிப் பார்க்கிறார். அது நிறைவேறாது என எண்ணி தன் எண்ணத்தை தானே செயல்படுத்த தன் கரங்களை தனக்கு துணை என்று தோட்டத்தில் காய்கறி தோட்டம் செய்தான். கனவுகள் நனவாகும் நேரத்தில் கடும் மழையின் காரணமாக தோட்டம் நாசமாகியது "மகத்தான ஏமாற்றத்தோடு தொங்கிப் போன முகத்தோடு வானத்தையே பார்த்துக்கொண்டிருந்தான் கிழவன். மழை தொடர்ந்து பெய்து கொண்டே இருந்தது" கதாசிரியர் இப்படி முடிக்கின்றார்.

தன்னுடைய ஆசையை நிறைவேற்ற தள்ளாத வயதிலும் மண்ணோடு போராடும் ரங்கையாக் கிழவன். காடு எரிந்தால் மழைவரும் என்ற நம்பிக்கைக்காக தான் பாடுபட்ட சேனையை எரித்துவிடும் மாணிக்கம், கை விரல்களில் தோல் கிழிந்து இரத்தம் கசிய கொழுந்தெடுத்து சத்தியத்தை நிலை நாட்டும் லெட்சுமி இப்படி பற்பல பாத்திரங்களை யதார்த்த பூர்வமான கலைத்துவ சத்தியங்களை இந்தக் கதையில் தரிசிக்கின்றோம்.

"ஒரு கூடைக் கொழுந்து" என்ற சிறுகதைத் தொகுதி மூலம் மலையக சிறு கதைகளுக்கு பெருமைத் தேடி தந்த ராமையாவின் "வேட்கை" என்ற கதை தமிழ் நாட்டில் வாசகர் வட்டம் வெளியிட்ட "அக்கரை இலக்கியம்" என்ற நூலில் இடம் பெற்றுள்ளது. மலையக மக்களின் வாழ்க்கையைக் கருவாகக் கொண்ட இக்கதைகள் மலையக மண்ணுக்கே உரிய சிறப்பான தன்மையுடன் உரையாடுகின்றன. மலையக சிறுகதை இலக்கியம் பற்றி பேசப்படும் பொழுது ஒருகால கட்டத்தைப் பிரதிபலிக்கும் என். எஸ். எம். யின் கதைகள் வரலாற்று முக்கியத்துவம் பெறும் என்பதில் ஐயமில்லை.

---

## கருத்தரங்கு

மலையகத்தில் முதல் தொழிற் சங்கத்திற்கு வித்திட்டவரும், மலையக உரை நடை இலக்கியத்தின் முதல்வரும், மலையக பத்திரிகைத் துறை முன்னோடியுமான அமரர் கோ. நடேச ஐயர் அவர்களைப் பற்றிய கருத்தரங்கு ஒன்றினை மலையக கலை இலக்கியப் பேரவை ஏற்பாடு செய்து வருகின்றது. இதே கருத்தரங்கு மே மாதம் முதல் வாரம் கண்டியில் நடைபெற உள்ளது.

அமரர் கோ. நடேச ஐயரைப் பற்றிய கருத்தரங்கில் நடேசஐயர் ஓர் அறிமுகம், நடேச ஐயரும் தொழிற்சங்கமும், நடேச ஐயரும் பத்திரிகைப் பணியும், நடேச ஐயரும் உரை நடை இலக்கியமும், போன்ற தலைப்புகளில் ஆய்வுரைகள் நிகழ்த்தப்படும். கோ. நடேச ஐயரைப் பற்றி இன்றைய இளைய தலைமுறையினரும், மலையக மக்களும் தெரிந்துகொள்ளும் வகையில் காத்திரமான ஆய்வுக்கட்டுரைகள் இக்கருத்தரங்கில் வாசிக்கப்படும்.

மேற்படி கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோர்

செயலாளர்,<br>
மலையகக்கலை இலக்கிய பேரவை<br>
57, மகிந்த பிளேஸ்,<br>
கொழும்பு - 6

என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளும்படி கேட்டு கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: சு. ப. சிவம்

---

● பெங்களூர், பம்பாய், சென்னை போன்ற நகரங்களில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின் படி ஒவ்வோர் ஆண்டும் சுமார் 2,75,100 பெண்கள் புற்றுநோயைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள் எனத் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குன்றின் குரல் நடத்தும் மலையக கவிதைப் போட்டி

## பரிசு ரூபா 1000-00

மலையகத்தில் பெருகி வரும் "கவிதா" வேகத்திற்கு துணை நிற்கவேண்டுமென்ற ஆர்வத்தின் காரணமாக "குன்றின் குரல்" மலையக கவிதைப் போட்டி ஒன்றினை நடத்த முன் வந்துள்ளது. இந்தப் போட்டி மரபுக்கவிதை, புதுக்கவிதை என்ற இருப்பிரிவுகளாக நடாத்தப்படும்.

இந்தக் கவிதைப்போட்டியில் எவரும் பங்கு பற்றலாம். மலையகமே நிலைக்களனுகவும், கருப் பொருளாகவும் அமையவேண்டும். கவிதை போட்டிகளில் பங்குபற்றுவோர் இரண்டு போட்டிகளிலும் பங்குபற்றலாம். ஆனுல் படைப்புகளை வெவ் வேருக அனுப்பிவைக்க வேண்டும். கடித உறைகளில் மரபுக்கவிதை, புதுக்கவிதை என்று குறிப்பிடவேண்டும்.

கவிதைப் போட்டிக்கு படைப்புகளை அனுப்புவோர் அவசியம் பின்பற்றவேண்டியது; கவிதைகளில் தங்களுடைய பெயர்களை குறிப்பிடக்கூடாது. வேறு ஒரு தாளில கவிதையின தலைப்பு, எழுதியவரின பெயா், புனைப்பெயராக இருப்பின் சொந்தப் பெயா முகவரி ஆகியவற்றை விபரமாக குறிப்பிட வேண்டும்,

போட்டிகளில் பங்குபற்றும் ஒருவர் எத்தனை படைப்புகளை வேண்டுமானுலும் அனுப்பலாம் தனித்தனி கடித உறைகளில் அவைகள அனுப்பப் படவேண்டும். கவிதைகளை தேர்ந்தெடுக்கும பொறுப்பு தகுதிவாய்ந்த குழுவினரிடம் ஒப்படைக்கப்படும். போட்டி முடிவு திகதி 25-3-87 முதல் பரிசு ரூ. 200/- இரண்டாம் பரிசு ரூ. 150/- மூன்றும் பரிசு ரூ. 100-/ ஆறுதல் பரிசு ரூ. 50/- இரண்டு போட்டிகளுக்கும், வெவ்வேருக இதுப் போன்ற பணப்பரிசில்கள் வழங்கப்படும். தரமான படைப்புகளை எழுதியவர்களுக்கு நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்படும்

அனுப்ப வேண்டிய முகவரி:

**கவிதைப் போட்டி**
**குன்றில் குரல்**
**30, புஸ்பதான மாவத்தை**
**கண்டி.**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சங்கப் பணிகளிலே தோளோடு தோள் நின்று பணியாற்றியவருமான அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் அவர்கள் இந்த சரஸ்வதி வித்தியாலயத்தின் பெயர் மாற்றம் செய்வதுடன் வித்தியாலயத்தின் முன்னுள் அமரரின் முழு உருவச்சிலையை நிருவவேண்டும்.

இன்று ஆசியாவிலேயே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒரு பாரிய தொழிற்சங்க நிறுவனமாக வளர்ந்துள்ளது. இந்த வளர்ச்சிக்கெல்லாம் அடித்தளம் இட்டவர்களில் மிக முக்கியமானவர் அமரர் இராஜலிங்கமாகும். அன்னுரை மறந்துவிடாது அவரைப்பற்றிய வரலாற்றை தொகுத்து நூல் உருவில் வெளிக்கொணர இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்வரவேண்டும்.

மலைநாட்டு மக்கள் கல்வி அறிவிலும் உயர்ந்து ஏனைய சமூகத்துடன் ஐக்கியப்பட்டு ஒளிவிட்டு பிரகாசிக்க வேண்டுமென்று கனவு கண்டு அதனை நனவாக்குவதற்காக இல்லற வாழ்க்கையை துறந்து பிரம்மசாரியாக வாழ்ந்த இலட்சக்கணக்கான மக்களின் இதயம்கவர்ந்த தலைவரான மலைநாட்டு காந்தி அமரர் இராஜலிங்கத்திற்கு என்றும் இனி வரும் தலைமுறை அறிந்துக்கொள்ளும் வண்ணம் நினைவுச் சின்னங்களை எழுப்பவேண்டும். இதுவே இன்றைய தலைமுறைக்கு வைக்கும் கோரிக்கையாகும்.

குன்றின் குரல்" தோட்டப் பிரதேசங்கட்கான கூட்டுச் செயலகத்தின் சஞ்சிகை. அச்சிட்டு வெளியிடுபவர் வண. போல் கெஸ்பர்ஸ் அடிகள் முகவரி: 30, புஸ்பதான மாவத்த, கண்டி. அச்சகம்: ரேயல் பிரிண்டர்ஸ் 190, கொழும்பு வீதி, கண்டி. இணை ஆசிரியர்கள்: அ. கி. இம்மானுவேல், ஜே. ஜேஸ்கொடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org